**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் பங்குனித் திங்கள் 19ம் நாள்
2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02-ம் நாள் வியாழக்கிழமை
*******

**அசல் வழக்கு எண். 74/2018**
**CNR.No.TNMY07-000094-2018**

கருணாகரன் ...**வாதி**

....**எதிர்**...

1. சண்முகம்
2. திருஞானம் ...**பிரதிவாதிகள்**

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 27.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. B. ரெங்கராஜு அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

தாவா சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவிப்பதை பிரதிவாதிகளோ அல்லது அவர்களது ஆட்களோ அல்லது அவரது ஏஜெண்டோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வாதி வழக்குரையின் சுருக்கம்**

**(1.1)** தாவா சொத்து சீர்காழி டி.மு.இலாக்கா, சீர்காழி தாலுக்கா, ராதாநல்லூர்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.02 19:03:37 +0530

கிராமத்தில் அமைந்துள்ளது என்றும், தாவா சொத்து ஆதியில் வாதியின் தகப்பனார் கஞ்சமலை என்பவரது பெயரில் பட்டாவும், உரிமை, அனுபவம் மற்றும் வசத்திலும் இருந்து வந்ததாகவும், வாதியின் தகப்பனார் கஞ்சமலை 19.08.1996ல் இறந்த பிறகு தாவா சொத்து கஞ்சமலையின் மூத்த மகனான வாதியின் உரிமையிலும், அனுபவத்திலும் இருந்து வருவதாகவும்,

**(1.2)** தாவா சொத்தில் வாதி 4 வருடங்களாக சவுக்கு மரம் வளர்த்து வருவதாகவும், தாவா சொத்திற்கு வாதி கிஸ்தி செலுத்தி அனுபவித்து வருவதாகவும், மேலும், தாவா சொத்திற்கு வடக்கில் பிரதிவாதிகளின் தாயார் சரஸ்வதி புஞ்சை நிலம் உள்ளது என்றும், மேற்படி சரஸ்வதி இறந்த பிறகு தாவா சொத்திற்கு வடக்கில் உள்ள நிலத்தை சரஸ்வதியின் வாரிசுகளான பிரதிவாதிகளும் மற்ற வாரிசுகளும் அனுபவித்து வருவதாகவும்,

**(1.3)** பிரதிவாதிகள் அவர்கள் சொத்தோடு தாவா சொத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் தாவா சொத்தை ஆக்கிரமிக்க கடந்த 2018, பிப்ரவரி மாதத்தில் முயற்சி செய்தார்கள் என்றும், அதை வாதி தடுத்து விட்டதாகவும், தாவா சொத்தை பிரதிவாதிகள் மீண்டும் ஆக்கிரமிக்க 12.03.2018ம் தேதி முயற்சி செய்ததாகவும்,

**(1.4)** 1,2 பிரதிவாதிகள் உடன்பிறந்த சகோதரர்கள் என்றும், அவர்கள் தாவா சொத்தை மீண்டும் வந்து ஆக்கிரமிக்கப் போவதாக பலர் அறிய சூளுரைத்து விட்டு சென்றுள்ளதால் வாதியானவர் பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாக வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர் வழக்குரையின் சுருக்கம்</u>**

**(2.1)** வாதி வழக்குடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் செல்லத் தக்கதல்ல என்றும், அவை தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்றும், வாதியிடமோ



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.02 19:03:50 +0530

அல்லது அவரது தகப்பனாரிடமோ வழக்கு சொத்து எந்த காலத்திலும் அனுபவத்திலும், வசத்திலும் இருந்தது கிடையாது என்றும், வாதியின் தகப்பனார் பெயரில் உள்ளது பெயரளவில் ஏற்பட்ட பட்டா என்றும், வாதியின் தகப்பனாருக்கு வழக்கு சொத்தைப் பொறுத்து பதிவு செய்யப்பட்ட எந்த ஆவணமும் கிடையாது என்றும்,

**(2.2)** வாதியின் உரிமையை நிலை நாட்ட வாதியின் தகப்பனார் பெயரில் பட்டா மட்டும் போதாது என்றும், எந்தவித பதிவு ஆவணமும் இல்லாமல் வாதிக்கு டைட்டிலும், அனுபவமும் வந்து விடாது என்றும், வாதி வழக்கு சொத்தில் 4 வருட சவுக்கு பயிர் செய்ததாக கூறுவது பொய் என்றும், வாதி வழக்கு சொத்தில் சவுக்கு மற்றும் எந்த பயிரும் சாகுபடி செய்யவில்லை என்றும்,

**(2.3)** வழக்கு சொத்தை பிரதிவாதிகளும், அவர்களது தகப்பனாரும் சுமார் 50 வருடங்களுக்கு மேல் தங்கள் வசத்தில் வைத்து சாகுபடி செய்து வருகின்றனர் என்றும், பிரதிவாதிகள் வடக்கில் உள்ள தங்கள் நிலத்துடன், வழக்கு சொத்திலும் 4 வருடங்களுக்கு முன்பு சவுக்கு மரம் பயிர் செய்து தற்போது சவுக்கை வெட்டும் நிலையில் உள்ளது என்றும்,

**(2.4)** பிரதிவாதிகளுக்கும், அவர்கள் தகப்பனாருக்கும் வாதிகள் குடும்பத்தில் ஏற்பட்ட ஏற்பாடுபடி வழக்கு சொத்து பிரதிவாதிகள் குடும்பத்துக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், பெயரளவில் வாதி தகப்பனார் பெயரில் ஏற்பட்ட பட்டாவை வைத்துக் கொண்டு வாதி வழக்கு சொத்தை உரிமை கோர முடியாது என்றும்,

**(2.5)** மேலும், வாதி தான் வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய அடியாட்களுடன் வந்து முயன்று தோல்வியடைந்து விட்டதாகவும், வாதி பெயரில் பிரதிவாதிகள் திருவெண்காடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளதாகவும், வாதி வழக்கு சொத்தை அபகரிப்பு செய்யவதற்காகவே,



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.02 19:03:57 +0530

பிரதிவாதிகள் பயிர் செய்த சவுக்கை, வாதி பயிர் செய்ததாக பொய் சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும்,

**(2.6)** விளம்புகை பரிகாரம் இல்லாமல் உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டும் கேட்டு வழக்கு தாக்கல் செய்தது சட்டப்படி நிலைநிற்கத் தக்கதல்ல என்றும், எனவே இவ்வழக்கினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>இவ்வழக்கின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் தீர்வுக்காக வனையப்பட்டுள்ளன.</u>**

1. **தாவா சொத்து வாதியின் வசத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிறதா?**
2. **வாதி தாவாவில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ?**
3. **தரப்பினர்களுக்கு வேறு என்ன பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது?**

4. வாதி தரப்பில் வாதியான திரு. கருணாகரன் என்பவர் **வா.சா.1** ஆகவும், திரு. பாலு என்பவர் **வா.சா.2** ஆகவும், சாட்சியம் அளித்துள்ளனர். வாதி தரப்பில் **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.4** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதியான திரு. சண்முகம் என்பவர் **பி.சா.1** ஆகவும், திரு. ராஜதுரை என்பவர் **பி.சா.2** ஆகவும் சாட்சியம் அளித்துள்ளனர். பிரதிவாதிகள் தரப்பில் **பி.சா.ஆ.1** மற்றும் **பி.சா.ஆ.2** சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. (i)** வாதி தரப்பில் இவ்வழக்கினை அனுசரித்து வாதியான திரு. கருணாகரன் வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக 05.02.2018 தேதியிட்ட தாவா சொத்திற்கான வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள கணினி பட்டா (**பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன்**) **வா.சா.ஆ.1** ஆகவும், 01.03.2018



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.02 19:04:03 +0530

தேதியிட்ட தாவா சொத்திற்கான கிஸ்தி (கந்தாய) ரசீது (**பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன்**) **வா.சா.ஆ.2** ஆகவும், 28.08.2015 தேதியிட்ட வாதியின் தாயார் விசாலாட்சியின் இறப்பு சான்றின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகவும், 19.06.2009 தேதியிட்ட வாதி தகப்பனார் கஞ்சமலையின் வாரிசு சான்றின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகவும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**(ii)** பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஆன திரு. கருணாகரன் என்பவரை குறுக்கு விசாரணை செய்யும்போது, அவர் மூலமாக மயிலாடுதுறை சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.116/2014ன் பிராது நகல் **பி.சா.ஆ.1** ஆகவும், பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள பிரதிவாதி திரு. சண்முகம் மூலமாக 13.03.2018 தேதியிட்ட அடங்கல் கணக்கு அசல் (வாதி தரப்பு ஆட்சேபனையுடன்) **பி.சா.ஆ.2** ஆகவும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

<u>6. வாதி தரப்பு வாதம்:–</u>

**(6.1) வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்** தாவா சொத்தின் சர்வே எண் 72/8 என்றும், 32 ஏர்ஸ் விஸ்தீரணம் கொண்டது என்றும், தாவா சொத்து வாதியின் தகப்பனார் கஞ்சமலையின் பெயரில் பட்டா ஏற்பட்டு, அவர் அனுபவம் செய்து வந்தும், அவர் காலமான பிறகு அவரது வாரிசு என்பதன் அடிப்படையில் இந்த வழக்கின் வாதி அனுபவத்திலும் வசத்திலும் இருந்து வருவதாகவும், அதற்கு ஆதாரமாக பட்டா, கிஸ்தி ரசீது மற்றும் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும்,

**(6.2)** பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு வடக்கில் பயிர் செய்கிறார்கள் என்றும், அவர்களுக்கு தாவா சொத்தில் எவ்வித அனுபவமும், உரிமையும் இல்லை என்றும், அவர்கள் சொத்தோடு தாவா சொத்தையும் சேர்த்து பயிர் செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் தாவா சொத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்ததை வாதி தடுத்துவிட்டதாகவும், எனவே வாதி கோரியவாறு



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.02 19:04:09 +0530

தீர்ப்பாணை செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**7. பிரதிவாதிகள் தரப்பு வாதம்:-**

**(7.1) பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்** தாவா சொத்து கஞ்சமலைக்கு பட்டா மூலம் கிடைக்கப்பெற்ற சொத்து என்றும், வாதி பெயரில் எவ்வித ஆவணமும் இல்லாமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், கஞ்சமலைக்கு தாவா சொத்து எப்படி கிடைத்தது என்பதை வாதி தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்றும், பட்டா இருப்பதாலேயே உரிமையும் அனுபவமும் நிரூபிக்கப்படுவதாக அர்த்தமல்ல என்றும், தாவா சொத்து குடும்ப பொது சொத்து என்றும், அந்த குடும்ப பொது சொத்தில் பாகப்பிரிவினை கோரி வாதி, பிரதிவாதிகளுக்கிடையே அ.வ.எண்.116/2014 மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்று, தற்போது சீர்காழி சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அ.வ.எண்.182/2023 ஆக நடைபெற்று வருகிறது என்றும்,

**(7.2)** வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கிஸ்தி ரசீது வெறும் ரசீது மட்டுமே என்றும், அந்த ஆவணம் உரிமை மூலத்தை வாதிக்கு வழங்கிவிடாது என்றும், தாவா சொத்தில் 50 வருடங்களாக பிரதிவாதி தகப்பனார் மற்றும் பிரதிவாதிகள் சாகுபடி செய்து வருவதாகவும், மேலும் பிரதிவாதிகள் மற்றும் அவர்கள் தகப்பனாருக்கு வாதி குடும்பத்தில் ஏற்பட்ட ஏற்பாடு படி பிரதிவாதிகள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள பட்டாவானது பெயரளவில் உள்ள பட்டா என்றும், தாவா சொத்து பிரதிவாதிகளின் வசத்திலும் அனுபவத்திலும் இருந்து வருவதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**8. வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் கேட்கப்பட்டது.**



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.02 19:04:14 +0530

9. இவ்வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வாதுரை, வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சிகளை பரிசீலனை செய்து இவ்வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்களுக்கு இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்வு காண்கிறது.

**தீர்வு**

**10. எழுவினா –1**

**தாவா சொத்து வாதியின் வசத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிறதா?**

**(10.1)** தாவா சொத்து வாதியின் தகப்பனாரான கஞ்சமலையின் பெயரில் இருந்து வருகிறது என்பதற்கு ஆதாரமாக வா.சா.ஆ.1 ஆவணமான பட்டா தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அதையொட்டி கஞ்சமலையின் பெயரில் கிஸ்தி ரசீது ஏற்பட்டுள்ளது. மேற்படி கிஸ்தியானது கஞ்சமலைக்காக வழக்கின் வாதி கருணாகரனால் தொகை செலுத்தப்பட்டுள்ளது. அந்த ஆவணம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணம் குறியீடு செய்யப்படும்போது, பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. ஆனால் ஆட்சேபனைக்கான காரணங்கள் கூறாததால் மேற்படி பிரதிவாதிகளின் ஆட்சேபனை நிராகரிக்கப்படுகிறது.

**(10.2)** தாவா சொத்தானது வாதி, பிரதிவாதிகளின் குடும்ப பொது சொத்து என்றும், அந்த குடும்ப பொது சொத்தில் பாகப்பிரிவினை கோரி வாதி, பிரதிவாதிகளுக்கிடையே அ.வ.எண்.116/2014 மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்று, தற்போது சீர்காழி சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அ.வ.எண்.182/2023 ஆக நடைபெற்று வருகிறது என்றும், தாவா சொத்து கடந்த 50 வருடங்களாக பிரதிவாதிகளின் தகப்பனார் மற்றும் பிரதிவாதிகளின் வசத்திலும் அனுபவத்திலும் இருந்து வருவதாகவும், வாதி, பிரதிவாதிகளின் குடும்பத்தில் ஏற்பட்ட ஏற்பாட்டின்படி தாவா சொத்தானது



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.02 19:04:20 +0530

பிரதிவாதிகளின் குடும்பத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றும், பிரதிவாதிகள் தரப்பில் வாதம் முன் வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாகப்பிரிவினை வழக்கு நடைபெற்று வருகிறது என்பதற்கு ஆதாரமாக பிரதிவாதிகள் தரப்பில் மயிலாடுதுறை சார்பு நீதிமன்ற அ.வ.எண்.116/2014ன் பிராது நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை கவனமாக பரிசீலனை செய்யும்போது, அதில் சொத்து விபரத்தில் உள்ள சொத்துக்களில் தாவா சொத்தின் சர்வே எண் எங்குமே இல்லை. வா.சா.1ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, அவர்

> **"நாராயணசாமிக்கு பிறகு இதுநாள் வரையில் எனது குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் அசல் வழக்கு எண்.116/2014 மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். ஆனால் அசல் வழக்கு எண்.116/2014ல் உள்ள சொத்தும் இவ்வழக்கு சொத்தும் வெவ்வேறானது"**

என்று சாட்சியமளித்துள்ளார். அதனை அனுசரித்து பி.சா.1 தனது குறுக்கு விசாரணையில்,

> **"பி.வா.சா.ஆ.1 ஆவணத்திற்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமுமில்லை என்றால் சரிதான்."**

என்று சாட்சியமளித்துள்ளார்.

ஆனால், பி.சா.2 ஐ வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது அவர்

> **"பாகப்பிரிவினை சொத்திற்கும் இந்த வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமுமில்லை என்றால் பாகப்பிரிவினை வழக்கில் இந்த வழக்கு சொத்தை சேர்க்கவில்லை"**

என்று சாட்சியமளித்துள்ளார்.



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.02 19:04:25 +0530

அப்படியென்றால் தாவா சொத்தானது குடும்ப பொது சொத்தாக இருக்கும் பட்சத்தில் பிரதிவாதிகள் தாவா சொத்தை சீர்காழி சார்பு நீதிமன்ற அ.வ.எண்.182/2023 வழக்கில் சேர்க்கவில்லை என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு தாக்கல் செய்ததாக எவ்வித சாட்சியமோ, எதிர்வழக்குரையின் நகலோ இந்த வழக்கின் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

எனவே, பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி தாவா சொத்திற்கும் குடும்ப பாகப்பிரிவினை சொத்திற்கும் எவ்வித சம்மந்தமுமில்லை என்று தெரிய வருகிறது. அதனால்தான் வாதியின் தகப்பனார் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது.

**(10.3)** மேலும், சுமார் 50 வருடங்களாக பிரதிவாதிகள் மற்றும் அவரது தகப்பனாரும் சேர்ந்து தாவா சொத்தில் சாகுபடி செய்து வருவதாக பிரதிவாதிகள் தரப்பில் கட்சி எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறு 50 வருடங்களாக சாகுபடி செய்ததற்கான எந்தவித ஆவணங்களும் பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை.

**(10.4)** பிரதிவாதிகளுக்கும் அவர்கள் தகப்பனாருக்கும் வாதியின் குடும்பத்தில் ஏற்பட்ட ஏற்பாடுபடி பிரதிவாதிகள் குடும்பத்திற்கு தாவா சொத்து பாத்தியப்பட்டது என்றும், பெயரளவில் வாதியின் தகப்பனார் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றும், அந்த பட்டாவை வைத்து எவ்வித உரிமையும் வாதி தரப்பில் கோர இயலாது என்றும் பிரதிவாதிகள் தரப்பில் வாதம் வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் வாதி, பிரதிவாதிகள் குடும்பத்திற்குள் தாவா சொத்தை பொறுத்து என்ன ஏற்பாடு ஏற்பட்டது என்பதுபற்றி பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித விளக்கமோ, ஆவணங்களோ இல்லை. மேலும், ஒருவேளை வாதியின் தகப்பனார் பெயரில் பெயரளவிலேயே பட்டா (வா.சா.ஆ.1) ஏற்பட்டிருந்தாலும் கூட ஏன் அந்த பட்டாவை ரத்து செய்வதற்கு எந்த நடவடிக்கையும் பிரதிவாதிகள் தரப்பில்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.02 19:04:31 +0530

எடுக்கப்படவில்லை என்பதற்கு எவ்வித விளக்கமும், ஆவணங்களும் பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை.

**(10.5)** வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் தான் சவுக்கு சாகுபடி செய்துள்ளனர் என்றும், அதற்கான அடங்கல் மற்றும் சிட்டா ஆகியவை பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.2 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணம் குறியீடு செய்யப்படும்போது வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. ஆனால் ஆட்சேபனைக்கான காரணம் கூறாததால் மேற்படி வாதியின் ஆட்சேபனையானது நிராகரிக்கப்படுகிறது.

தாவா சொத்தானது குடும்ப பொது சொத்து என பிரதிவாதிகள் நிரூபிக்காத நிலையிலும், வாதி, பிரதிவாதிகள் குடும்பத்தினரிடையே ஏற்படுத்தப்பட்ட ஏற்பாட்டின்படி தாவா சொத்தை பிரதிவாதிகள் அனுபவித்து வருவதாக கூறியுள்ளதை பிரதிவாதிகள் தரப்பில் நிரூபிக்காத நிலையிலும், பி.வா.சா.ஆ.2 ஆவணம் எவ்வாறு பெறப்பட்டது என்பது குறித்து பிரதிவாதிகள் தரப்பில் சரியான விளக்கமில்லை. பி.சா.1 ஐ வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது,

> **"பி.வா.சா.ஆ.2 ஆவணம் எவ்வாறு பெறப்பட்டது என்றால் நாங்கள் VAOவிடம் கூறினோம், அவர்கள் வந்து இடத்தை பார்த்து பிறகு சான்றிதழ் வழங்கினார்கள். பி.வா.சா.ஆ.2 ஆவணம் கோரி மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான்"**

என்று சாட்சியமளித்துள்ளார்.

மேற்கண்ட சாட்சியத்தை பரிசீலனை செய்யும்போது, பி.வா.சா.ஆ.2 ஆவணம் கோரி மனு கொடுக்காமலேயே, எவ்வாறு பிரதிவாதிகளுக்கு அந்த ஆவணம் கிடைக்கப்பெற்றது என்பது குறித்து பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித விளக்கங்களும் இல்லை.

எனவே, மேற்கண்ட சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.02 19:04:36 +0530

செய்யும்போது, தாவா சொத்தானது வாதியின் வசத்திலும் அனுபவத்திலும் தான் இருந்து வருகிறது என்பதை வாதி தரப்பில் உரிய சாட்சிய, சான்றாவணங்கள் மூலமாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று எழுவினா–1 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

<u>11.எழுவினா–2</u>

**வாதி தாவாவில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ?**

எழுவினா 1 ஆனது வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், முதற்தோற்ற வழக்கு, வசதிக்கான சமநிலை ஆகியவை வாதிக்கு ஆதரவாக உள்ள நிலையிலும், வாதி கோரிய பரிகாரம் வழங்காவிடில் வாதிக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்பதாலும், வாதி தாவாவில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று எழுவினா–2 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

<u>12.எழுவினா–3</u>

**தரப்பினர்களுக்கு வேறு என்ன பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது?**

எழுவினா எண்.1 மற்றும் எழுவினா எண்.2 ஆகியவை வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ளதால், தரப்பினர்களுக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் ஏதும் இல்லை என்று எழுவினா–3 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

**முடிவில்,** இவ்வழக்கானது அனுமதிக்கப்பட்டு, தாவா சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவிப்பதை பிரதிவாதிகளோ அல்லது அவர்களது ஆட்களோ அல்லது அவரது ஏஜெண்டோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு ஆதரவாக வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. தரப்பினர்களின் உறவுமுறையை கருத்தில் கொண்டு



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.02 19:04:42 +0530

செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுத்து, பின்னர் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின்னர் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.02 19:04:49 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>பின் இணைப்பு</u>**
**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>**

வா.சா.1 திரு. கருணாகரன்
வா.சா.2 திரு. பாலு

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 05.02.2018 | தாவா சொத்திற்கான வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள கணினி பட்டா |
| வா.சா.ஆ.2 | 01.03.2018 | தாவா சொத்திற்கான கிஸ்தி (கந்தாய) ரசீது |
| வா.சா.ஆ.3 | 28.08.2015 | வாதியின் தாயார் விசாலாட்சியின் இறப்பு சான்றின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 19.06.2009 | வாதியின் தகப்பனார் கஞ்சமலையின் வாரிசு சான்றின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>**

பி.சா.1 திரு. சண்முகம் (பிரதிவாதி)

பி.சா.2 திரு. ராஜதுரை

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | -- | மயிலாடுதுறை சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.116/2014-ன் பிராது நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 13.03.2018 | அடங்கல் கணக்கு அசல் |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.02 19:04:57 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சீர்காழி

**நேரிய/வரைவு தீர்ப்புரை**
அசல் வழக்கு எண்.74/2018
நாள்.02.04.2026.